[6th March 1959

(e) There is no " supervisory control " as such. The Secretary to Government, Industries, Labour and Co-operation Department is a Director representing this Government on the Board of Directors of the Company.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்தக் கம்பெனி நஷ்டத்தில் வேலை செய்துவருவதாக இதில் அறிக்கையில் கண்டிருக்கிறது. நமது சர்க்காரிலிருந்து அங்கே போடப்பட்டிருக்கும் டைரக்டர், இந்தக் கம் பெனி அவ்வாறு நஷ்டத்தில் இயங்கிவருவதற்கு என்ன காரணங்கள் தெரிவித்திருக்கிறார் ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தக் கம்பெனி 1953-ம் வருஷம் வரையிலும் நஷ்டத்தில் வேலை செய்தது. அதற்குப் பிறகு லாபத்தில் வேலை செய்து வருகிறது. அதற்கு (1953) முன்பு இந்த ஆல்வாய் கம்பெனியின் உற்பத்திச் செலவு (காஸ்ட் ஆப் ப்ரொடக் ஷன்) அதிகமாக இருந்தது. 1953-க்குப் பிறகு, நமது நாட்டில் உற் பத்தி செய்யப்படும் எல்லா உரங்களையும் சேர்த்து " பூல் ப்ரைஸ் " கொடுக்க ஆரம்பித்த பிறகு, இது லாபத்தில் வேலை செய்துவருகிறது.

Periyar Hydro-Electric Scheme

* 618 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state the expenditure incurred for the Periyar Hydro-Electric Scheme in October 1958?

THE HON. SRI V. RAMAIAH : An expenditure of Rs. 6·96 lakhs was incurred on the construction of the Project during October 1958.

SRI N. K. PALANISAMI : கொலம்போ திட்டத்தின் கீழ் நமக்கு கனடா சர்க்காரிடமிருந்து கிடைக்கவேண்டிய கடன் தொகையில் இந்த வருஷம் நமக்கு எவ்வளவு தொகை கிடைத்தது ? அந்தத் தொகை யில் இந்த வருஷம் எவ்வளவு உபயோகப்படுத்தப்பட்டது ?

MR. SPEAKER : நீங்கள் போட்ட கேள்வி எனக்குப் புரியவில்லை. அதைத் திரும்பவும் சொல்லுங்கள்.

SRI N. K. PALANISAMI : இந்தத் திட்டத்தில் நமக்கு இந்த வருஷம் கனடாவிலிருந்து எந்த அளவிற்கு உதவி கிடைத்தது ? அந்த உதவிப் பணத்தில் எவ்வளவு செலவழிக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : இந்த திட்டத்திற்கு நமக்கு கனடாவிலிருந்து எந்த விதமான உதவியும் கிடைக்கவில்லை.

Extension of electricity supply

* 619 Q.—SRI. S. LAZAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) the number of villages in Tiruchirappalli district where electricity was extended during

(i) the first year,

(ii) the second year of the Second Five-Year Plan period, and

(iii) the current year so far;

for both agricultural and household purposes;

6th March 1959]

(b) the number of villages that have made requests to be provided with electricity;

(c) whether extension is going on according to the programme of the Government;

(d) if not, the reasons therefor; and

(e) the steps taken by the Government to expedite the implementation of the programme?

THE HON. SRI V. RAMAIAH : (a)—

(i) First year	30
(ii) Second year	27
(iii) Current year up to 31st December 1958 ...	18

(b) 181, in the State Electricity Board's area and 160, in the licensee's area, during the period March 1956 to December 1958.

(c) Yes, Sir. The target for rural electrification of villages has been fixed for the entire State and not for each district. The Second Plan target for rural electrification is 5,000 villages and 2,604 villages have been supplied with electricity during the first two years (1956–57—1,300 and 1957–58—1,304) as against the target of 2,000 villages.

(d) & (e) Do not arise.

SRI S. LAZAR : ஜில்லாக்களுக்கு என்று சராசரிக் கணக்குப் போட்டுப் பார்க்கும்போது, திட்டம் மாநிலம் பூராவுக்குமே வகுக்கப்பட்டிருந்தபோதிலும், ஒவ்வொரு ஜில்லாவிலும் குறைந்தது 75 அல்லது 80 கிராமங்களிலாவது மின்சாரம் கொண்டுவரப்படவேண்டும். இந்த ஜில்லாவில் அந்த அளவிற்கு மின்சாரம் விஸ்தரிக்கப்படாததற்கு காரணம், அங்கே லைசென்ஸீஸ் இருப்பதுதானா ? அப்படியானால் இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக அவர்கள் கேட்கும் தனிச் சலுகையை அவர்களுக்குக் கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI V. RAMAIAH : நமது கிராம மின்சார விஸ்தரிப்புத் திட்டப் பிரகாரம் எந்த எந்த கிராமங்களுக்கு மின்சாரத்தை உடனடியாக விஸ்தரிப்பதற்கு ஏற்றவாறு ரெம்யூனரேடிவ் ஸ்கீம்ஸ் அமைகின்றனவோ, அங்கெல்லாம் மின்சாரத்தை விஸ்தரிக்க நடவடிக்கைகள் எடுத்துவருகிறோம். குறிப்பாக லைசென்ஸீஸ் இருக்கும் பகுதிகளில் திட்ட விஸ்தரிப்பில் வேகம் கம்மியாக இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

SRI V. SUBBIAH : விவசாயிகளுக்கு மின்சார விசை விநியோகிக்கும்போது "காரன்டீ lines", கொடுப்பது இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : இதற்குத் தனி கேள்வி போட வேண்டும்.

Kovilpatti Panchayat Board Elections

*620 Q.—SRI V. SUBBIAH : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) கோவில்பட்டி பஞ்சாயத்தை வார்டுகள் பிரிக்காமல் தேர்தல் நடத்துவதன் காரணம் என்ன ?

(ஆ) பஞ்சாயத்து போர்டில் வார்டுகள் பிரித்து தேர்தல்கள் நடத்த வேண்டும் என ஏகமனதாக தீர்மானம் செய்தது அரசாங்கத்துக்குத் தெரியுமா ?